# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

திங்கட்கிழமை 16.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


## நாட்டில் புதிதாக வெற்றிபெற்று வரும் ஜனாதிபதியே உங்களின் கவனத்திற்கு

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தனியான இயங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

## இல்லையேல் மீண்டும் போராட்டம் வெடிக்கும்



**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய நிர்வாக உரிமைகளை மீட்பதற்காக கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்டு காணப்படுகின்ற 29 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குள்ளும் வாழுகின்ற பொது மக்கள் பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒழுங்கமைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற உரிமைக்கான மக்கள் போராட்டமானது நேற்றோடு 174 வது நாளாகவும் எமது இலக்கு நோக்கி எமது மக்களுடைய அபிலாசைகளோடு அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த திட்டமிடல்களோடு தொடர்ச்சியாக நடந்து வருகின்றது.**

02 ஆம் பக்கத்தில்...

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் தொடர்பான
# விசேட அறிக்கை இன்று



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட அறிக்கையொன்றை இலங்கை தமிழரசுக் கட்சி நாளை வெளியிடவுள்ளது.

வவுனியாவில் குறித்த அறிக்கை வெளியிடப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் குழு கடந்த வாரம் கூடியிருந்தது.

இதன்போது, சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராயப்பட்டிருந்து.

அதன்படி, சஜித் பிரேமதாசவை, இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரிப்பதற்கான காரணங்கள் அடங்கிய விசேட அறிக்கையொன்று இன்று வெளியிடப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

## அரியநேத்திரனுக்கு அச்சுறுத்தல்



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என தெரிவித்து பொலிஸார் அவசர கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியுள்ளனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரால் சிங்களத்தில் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தலில் அரியநேத்திரன் மீதான மக்கள் செல்வாக்கின் நிமித்தம் உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நிகழ்வுகளின் பாதுகாப்பு

02 ஆம் பக்கத்தில்...

## யாழில் தியாக தீபம் திலீபனுக்கு நினைவு அஞ்சலி உணர்வுபூர்வமாக மரியாதை செலுத்திய மக்கள்





ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம், நேற்றையதினம் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 9.45 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்தது டன், மாவீரர் றொஷானின் தாயார் இரத்தினசிங்கம் பொற்கொடியால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு முன்னாள் போராளி

02 ஆம் பக்கத்தில்...

## நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஊடக மையத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

02 ஆம் பக்கத்தில்...

# பொருளாதார அபாயங்களிலிருந்து இலங்கை இன்னும் முழுமையாக மீளவில்லை

## சர்வதேச நாணய நிதியம்

இலங்கை இதுவரையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ள போதிலும், நாடு இன்னமும் பொருளாதார ஆபத்தில் இருந்து மீளவில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த வெற்றிகளைப் பாதுகாப்பது முக்கியம் என்று அதன் தகவல் தொடர்புத் துறையின் இயக்குநர் ஜூலி கோசாக் வலியுறுத்தினார்.

இதனை எதிர்வரும் தேர்தலில் இலங்கை மக்கள் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொசெக் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

கடந்த ஜூன் 12 ஆம் திகதி, எங்களின் நிர்வாகக் குழுவினால் 2024 இலக்கம் ஐங உறுப்புரையின் கீழ் முன்னெடுக்கப்படும் ஆலோசனை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான வேலைத்திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது.

அதன் மூலம் இலங்கைக்கு சுமார் 336 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி விடுவிக்கப்பட்டுள்ளது. வேலைத்திட்டத்தின் செயல்திறன் வலுவாக உள்ளது. மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களின் பிரதிபலன்கள் காட்டப்பட்டுள்ளன.

பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. பணவீக்கம் குறைந்து வருகிறது. அந்நியச் செலாவணிக் கையிருப்பு மற்றும் அரச வருமானம் அதிகரித்து வருகிறது.

இருப்பினும், இன்னும் குறிப்பிடத்தக்க அளவு அபாயம் உள்ளது. எனவே, மறுசீரமைப்புகளைத் தொடர வேண்டியது அவசியமாகும் தனியார் கடன் வழங்குநர்கள் தங்கள் கடன் மறுசீரமைப்பு முன்மொழிவு தொடர்பான அறிக்கையை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுவது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், உள்நாட்டு கடன் மறுசீரமைப்புகளை நிறைவு செய்தல் மற்றும் உத்தியோகபூர்வ கடன்



வழங்குநர்கள் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் ஒப்பந்தங்களை எட்டுவது முக்கிய மைல்கற்களாக அமையும் என்றார்.

மேலும், IMF பணிக்குழாமினால் ஒன்றிணைக்கப்பட்ட கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து, அதன் மதிப்பீட்டை இலங்கை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாகவும், அதற்கு மேலதிகமாக இலங்கை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, IMF பணிக்குழாமினால் இந்த மதிப்பீட்டை இலங்கை பிணைமுறி உரிமையாளர்களின் நிதி ஆலோசகர்களுக்கும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் எங்களின் பணி அதிலிருந்து முடிவடைகிறது. கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் சர்வதேச நாணய நிதியம் பங்கேற்பதில்லை என்பதை நான் இங்கு வலியுறுத்த வேண்டும்.

அந்த பேச்சுவார்த்தைகள் கடன் பெற்ற நாட்டிற்கும் அதன் கடன் வழங்குநர்கள் இடையில் நடைபெறுகின்றன. சர்வதேச நாணய நிதியம் கடன் நிலைபேற்றுத்தன்மையின் பொதுவான மதிப்பீட்டை மாத்திரமே செய்கிறது.

மேலதிக விபரங்களுக்கு, இலங்கை அதிகாரிகள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையைப் ஆராயுமாறு பரிந்துரைக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் கடன் நிலைபேற்றுத்தன்மை மதிப்பீடு (DSA) தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த ஜூலி கொசெக் (Julie Kozack),

இதற்கான எனது பதில் எனது முந்தைய பதில்களைப் போலவே உள்ளது. முதலில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பார்வையில், இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருப்பதைக் காணலாம்.

ஆனால் இலங்கை தனது வரலாற்றில் எதிர்கொண்ட மிக மோசமான நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு, இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அடைந்த சாதனைகளை பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.

மூன்றாவது மீளாய்வுக்கான காலம் குறித்து தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர், புதிய அரசாங்கம் அல்லது இலங்கை மக்கள் செய்யும் தெரிவின் அடிப்படையில், வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர எதிர்பார்க்கிறோம்.

அதன்படி செயல்பட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

## நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?

ஜனநாயக கட்டமைப்பிற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஜனாதிபதிக்கு, அதிகார பரிமாற்றம், மக்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தாமல் ஜனநாயக ரீதியாக நடைபெற வேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு ஜனநாயக ரீதியாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதனால் மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

ஒருவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அவர் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் மிகவும் நேர்மையற்ற செயலாகும் என்றார்.

## அரியநேத்திரனுக்கு அச்சுறுத்தல்

தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் போது அந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் அதிருப்தியில் இருப்பதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே பொது விடயங்களின் கீழ் அச்சுறுத்தல் இருப்பதாகவும், அது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும் அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் தியாக தீபம் திலீபனுக்கு நினைவு அஞ்சலி உணர்வுபூர்வமாக மரியாதை செலுத்திய மக்கள்

**ஒருவர் மலர் மாலை** அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தார்.

இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்,

சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து,

தியாகதீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ் நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி சாவைத் தழுவிக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் புதிதாக வெற்றிபெற்று வரும் ஜனாதிபதியே உங்களின் கவனத்திற்கு

ஆனாலும் எமது மக்கள் போராட்டத்தின் போது கலந்து கொண்டிருந்த பல அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் சார் தீர்மானங்களை முடிவுகளை எடுக்கக்கூடிய நபர்கள் மூலமாகவும் அரசுக்கு பல்வேறு செய்திகளை நாங்கள் வழங்கி இருந்தோம்,

அது மாத்திரமில்லாமல் போராடுகின்ற மக்கள் சார்பாக அன்று நடைபெறுகின்ற போராட்டம் தொடர்பிலான ஆதாரங்களோடும் எமது மக்களுடைய கோரிக்கைகளோடும் அனைத்து சிவில் சமூகக் கட்டமைப்பினுடைய இறப்பர் முத்திரையோடு தொடர்ச்சியாகவும் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ,பிரதமர்,உள்நாட்டலுவல்கள் அமைச்சர்,அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர்,மாவட்ட செயலாளர்

என பல தரப்பினருக்கும் எமது கோரிக்கைகளை தொடர்ச்சியாக அனுப்பியிருந்தாலும் கூட ஒரு சில பதில்கள் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் அமைச்சின் செயலாளர் போன்றவர்களிடமிருந்தும் மாவட்ட செயலாளரிடமிருந்தும் கிடைத்திருந்தாலும் அவைகளிலே எது விதமான திருப்தியும் எங்களுக்கு இல்லை அல்லது எங்களுடைய கோரிக்கைகளுக்குரிய பதிலாக அவைகள் அமையவில்லை என்பதை வெளிப்படுத்துவதோடு ,

அதையும் கடந்து தொடர்ந்தும் எங்களுடைய மக்கள் உரிமைக்காக வீதியில் இறங்கிக் குரல் கொடுத்து அமைதி வழியில் போராடுகின்றனர், ஆனாலும் இந்த அரசு எமது மக்களுடைய போராட்டத்தை மதிக்கவோ அல்லது எமது மக்களுடைய நியாயமான போராட்டத்திற்கான தீர்வை வழங்குவதற்கோ முன் வந்திருக்கவில்லை என்பதையும் மாறாகத் தொடர்ந்தும் ஏமாற்றியே வந்துள்ளது என்பதையும் கூற கடமைப்பட்டுள்ளதோடு இந்தப் போராட்டமானது ஒரு இனத்திற்கோ அல்லது தனி நபர்களுக்கோ எதிரானது கிடையாது என்பதையும் இது ஒரு அரச நிர்வாக ரீதியான கட்டமைப்பை சீர் செய்வதற்கான போராட்டம் மாத்திரமே என்பதையும் வெளிப்படுத்துகின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி எனும் அடிப்படையில் எமக்கான தீர்வை வழங்கக்கூடிய உயர் அதிகாரத்தில் இருக்கும் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் தொடர்ந்தும் நேரடியாகவும் அரசியல்வாதிகள் ஊடாகவும் ஜனாதிபதியினுடைய கவனத்திற்கு எமது விடயத்தைக் கொண்டு செல்லக்கூடியவர்கள் ஊடாகவும் பல்வேறு முயற்சிகளை நாங்கள் எடுத்திருந்தோம் விசேடமாக எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிழக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட 24 மணி நேர செயற்குழு தலைவர் உள்ளிட்டவர்கள் மற்றும் பல தமிழ் சிங்கள அரசியல்வாதிகள் ஊடாகவும் பல முயற்சிகள் எடுத்திருந்தும் எமது வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாத நிலை காணப்படுவதோடு நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டோம்,

மேலும் இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற கௌரவ அமைச்சர்கள் திரு.வியாழேந்திரன் மற்றும் திரு.பிள்ளையான் போன்றவர்களுடன் கூட நாங்கள் பேசியிருந்தோம் எமக்காக ஜனாதிபதியோடு பேசி எமது உரிமைக்கான குரலாக நீங்களும் இருந்து குறைந்தது ஒரு கணக்காளரை பெற்றுத் தாருங்கள் அல்லது நடைமுறையில் இருந்து நிறுத்தப்பட்டிருக்கின்ற வங்கிக் கணக்கையாவது மீள திறந்து தாருங்கள் என்றும் கேட்டிருந்தோம் யாரும் இதுவரை அதை செய்து கொடுக்கவில்லை எமக்காக எதையும் செய்யவும் இல்லை என்பதையும் அவர்களும் தொடர்ந்தும் இன்றுவரை எமது மக்களை ஏமாற்றியுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்துவதோடு,

மீண்டும் இறுதியாக நாங்கள் கடந்த 11.09.2024 அன்றும் கூட திருக்கோவில் பகுதியில் நடைபெற்ற ஜனாதிபதியினுடைய தேர்தல் பிரச்சார கூட்டத்தின் போது எங்களுக்காக ஒரு தீர்வை தர இருக்கிறார் என்று அறிந்தோம் குறைந்தபட்சமாக ஒரு கணக்காளர் அல்லது அதனிலும் குறைவாக தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தக் கூடியதாக இருக்கின்ற நிறுத்தப்பட்ட வங்கிக் கணக்கை மீண்டும் ஆரம்பிப்பது பற்றியும் நாங்கள் கேட்டிருந்தோம் ஆனால் அதுவும் எங்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும் கூறுவதோடு நாங்கள் நூறு வீதம் நம்பி இருந்த ஜனாதிபதியினுடைய பதில் இவ்வாறுதான் இருந்தது என்பதையும் எமது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதோடு, இதுவரையில் ஜனாதிபதியின் தரப்பிலிருந்து எங்களை பலர் சந்தித்திருக்கிறார்கள் அதேபோன்று நாங்களும் அவரை பல தடவைகள் பலதரப்புகள் ஊடாக சந்தித்திருக்கிறோம் ஆனாலும் இதில் எந்த நன்மையும் இதுவரை ஏற்படவில்லை என்பதையும் இன்றுவரை அவர் எமது மக்களை ஏமாற்றிவிட்டார் என்பதையும் ஆனால் எமது மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர்களது முகவர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளூடாக பொய் செய்திகள் வாக்குறுதிகளோடு பலர் வருகிறார்கள் அவர்கள் யாரையும் நம்ப வேண்டாம் எமது செயலக விடயத்தில் அவர்கள் கூறும் செய்திகளும் வாக்குறுதிகளும் பொய்யானவை என்பதையும் வெளிப்படுத்துகிறோம்.

அதே போன்று மற்றுமொரு வேட்பாளராக இருக்கக்கூடிய கௌரவ.திரு.சஜித் பிரேமதாச அவர்கள் அவர்கள் தரப்பில் இதுவரை யாரும் போராட்டம் செய்து வருகின்ற மக்களை அல்லது மக்கள் சார்ந்தவர்களை சந்திக்கவில்லை என்பதையும் நாங்களும் சந்திப்பதற்கான சந்தர்ப்பங்களை அவர்கள் எங்களுக்கு ஏற்படுத்தவில்லை என்பதையும் வெளிப்படுத்துவதோடு அவர்கள் தற்போது ஆட்சியாளர்கள் கிடையாது என்பதனால் குறைந்தபட்சம் வாக்குறுதியையாவது தருவதற்கு முன்வராதது ஏன் என சிந்திக்க வைப்பதோடு சிலவேளை அவருடன் எமது செயலக விடயத்திற்கு எதிராக செயற்படுகின்ற தரப்பினர் இருப்பதனால் எம்மை சந்திக்கவில்லையோ என நினைப்பதோடு அதுவும் காரணமாக இருக்கலாம் என்பதையும் நாங்கள் வெளிப்படுத்துவதோடு இவர்கள் தரப்பிலும் இதன் பின்னர் யாராவது அவர்களது முகவர்கள் அல்லது உள்ளூர் அரசியல்வாதிகள் பொய் செய்திகள் பொய் வாக்குறுதிகளுடன் வரலாம் என்பதால் அவர்கள் தொடர்பிலும் அவதானமாக இருங்கள் என்பதையும் கூறுகின்றோம்.

மேலும் மாற்றுமொரு தரப்பாக இருக்கின்ற திரு கௌரவ.திரு.அநுரகுமார திசாநாயக்க அவர்களுடைய தரப்பிலிருந்து இரண்டு தடவை எம்முடன் தொலைபேசி மூலமாகப் பேசியிருந்தார்கள் இரண்டு தடவை எங்களை நேரிலும் சந்தித்திருந்தார்கள் அவர்களும் தற்போது ஆட்சியாளர்களாக இல்லை என்பதனால் எமக்கு வாக்குறுதிகளை வழங்கி இருந்தார்கள் அதாவது தாங்கள் ஆட்சிக்கு வருகின்ற பட்சத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் மாத்திரம் அல்ல இலங்கையில் காணப்படுகின்ற ஒட்டுமொத்தமான நிர்வாக ரீதியான அத்தனை பிரச்சினைகளும் அரசியல் தலையீடுகள் இன்றி தீர்த்து வைக்கப்படும் என்று ஒரு வாக்குறுதியை எங்களுக்கு வழங்கியிருந்தார்கள் என்பதையும் கூறிக்கொள்வதோடு இவர்கள் தரப்பிலும் சில முகவர்கள் ஒருநாளும் எமது மக்கள் போராட்டத் தளத்திற்கும் வராதவர்கள் மக்கள் போராட்டம் பிழை என கூறியவர்கள் தம்மை போராட்டக்குழு என அறிமுகப்படுத்திச் சென்று சுயலாப அரசியல் செய்திருக்கிறார்கள் எனவே அவர்கள் தொடர்பிலும் மக்கள் அவதானமாக இருங்கள் எனவும் கூறிக் கொள்கிறோம்.

அத்தோடு இம்முறை தமிழர் தரப்பாக ஒரு வேட்பாளரும் களத்தில் தமிழரின் தனித்துவ அடையாளத்திற்காகவும் ஒற்றுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காகவும் நிறுத்தப்பட்டுள்ளதனால் அதுபற்றியும் பொதுமக்களாகிய நீங்களே சிந்திக்க வேண்டும் சிந்தித்து முடிவெடுத்து உங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும் இந்த செய்தியாளர் சந்திப்பு ஊடாக நாங்கள் வெளிப்படுத்துவதோடு,

இவ்வாறான நிலையிலே நாங்கள் எந்த முடிவையும் எடுக்க முடியாத தர்ம சங்கடமான சூழ்நிலை எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது அதேபோன்று எங்களுடைய மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பது எங்களுக்கு தெரியும் இருந்தாலும் எங்களுடைய மக்கள் புத்திசாதுர்யமாக சிந்திக்க கூடியவர்கள் இவ்வளவு காலமும் ஒவ்வொரு தரப்புகளால் மாறி மாறி ஏமாற்றப்பட்டவர்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் அதனால் நன்றாக சிந்தித்து தங்களுடைய வாக்குகள் தங்களுக்கு உரித்தானது உரிமையுடையது அது பலம் மிக்கது என்பதனால் நன்றாக சிந்தித்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன், யாருக்கும் வாக்களிக்குமாறு கூற முடியாத ஒரு சூழ்நிலையில் எங்களுடைய கருத்தை வெளிப்படுத்துகிறோம்.

மேலும் இந்தத் தேர்தலில் வெற்றி பெறப் போகின்ற வெற்றி பெற்று எதிர்காலத்தில் நாட்டின் ஜனாதிபதியாக வரப் போகின்றவரிடம் நாங்கள் கேட்பது தயவு செய்து நீங்கள் ஜனாதிபதியாக வருகின்ற பட்சத்தில் எங்களுடைய கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான நிர்வாக ரீதியான அத்தனை விடயங்களையும் தீர்த்துத் தனியான ஒரு பிரதேச செயலகமாக இது தனித்துவமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் எனவும் பணிவாக கேட்டுக் கொள்வதோடு இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர் பல தரப்புகளையும் சேர்ந்த பல முகவர்கள் உள்ளூர் அரசியல்வாதிகள் மக்களை நாடி வரலாம் பொய் செய்திகளையும் பொய் வாக்குறுதிகளையும் கூறி ஏமாற்றலாம் ஆனால் அவை எதையும் நம்ப வேண்டாம் ஆனால் உங்கள் வாக்குகளைக் கட்டாயம் உங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் சிந்தித்துச் செலுத்துங்கள் எனவும் கல்முனையில் எங்களின் வாக்கு பலத்தினை வெளிக்காட்டுவதற்கு அனைவரும் 100% உங்கள் வாக்குகளை வழங்கி எமது வாக்குப் பலத்தை வெளிக் காட்டுவதன் மூலமாகவே எம்முடைய அடுத்தகட்ட நகர்வை நாங்கள் முன்னெடுக்க முடியும் என்பதையும் உங்கள் வாக்களிப்பு வீத அதிகரிப்பு எமது போராட்டத்திற்கு இன்னும் அதிகமாக வலுச்சேர்க்கும் என்பதையும் கேட்டு எங்களுடைய போராட்டம் நாளைய 175 வது நாளுடன் தேர்தல் சட்ட விடயங்கள், அசௌகரியங்கள் எமது மக்களின் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாகத் தேர்தல் வரையும் நிறுத்தப்பட்டு எதிர் வருகின்ற தேர்தலில் வெற்றி பெற்று வருகின்ற ஜனாதிபதியிடம் எங்களுடைய கோரிக்கை மக்கள் சார்பாக கொண்டு சேர்க்கப்பட்டு அவர்களுடைய தீர்வு எங்களுக்கு கிடைத்தால் அவர்களுக்கு விசுவாசமாக எங்களுடைய மக்கள் எப்போதும் இருப்போம் என்ற ஒரு விடயத்தையும் கூறி அவ்வாறு எங்களுக்கான தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் தொடர்ச்சியாக எங்களுடைய போராட்டம் தொடரும் என்பதையும் கூறிக் கொள்கின்றோம்.

**அனைத்து சிவில் சமூக ஒன்றியம்,**

**கல்முனை வடக்கு.**

# தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து திருமலையில் தேர்தல் பரப்புரை கூட்டம்







தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேந்திரனை ஆதரித்து மாபெரும் பொதுக் கூட்டம் திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் அரங்கு கடற்கரை பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்றது. அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா தலைமையில் இடம் பெற்ற குறித்த தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா. அரியநேந்திரனுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்தனர். குறித்த தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்பர் ஏ.எச்

# விசேட தேவையுடையோர்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இன்னொருவரை அழைத்து செல்ல முடியும்

## 18+ வாக்காளர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வில் கெபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன்










(ஹஸ்பர் ஏ.எச்)

விசேட தேவையுடையோர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும் போது இன்னொருவரை அழைத்து செல்ல முடியும் இதற்கான விடயதானங்களை கிராம சேவகர் ஊடாக பெறலாம் எனவும் புதிதாக வாக்களிக்க செல்லும் இளைஞர் யுவதிகளுக்கான அச்சமற்ற நிலையை இல்லாது வாக்களிக்க வேண்டும் தொடர்பாக திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவித்தார்.

தம்பலகாமம், மீரா நகர் கிராம சேவகர் பிரிவில் (14) இளைஞர் யுவதிகளுக்கான 18+ வாக்களிப்பு தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் உட்பட அதற்கு மேலதிகமாக முதற் தடவையாக வாக்களிக்கவிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான வாக்களிக்கும் முறை தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளைவடக்கில் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் பொலன்னறுவை, அநுராதபுரம் மற்றும் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறோம் இதில் விருப்பு வாக்கு முறைமை தொடர்பிலும் பல விழிப்புணர்வுகளை நடாத்தி வருவதுடன் எதிர் வரும் சனிக் கிழமைக்கு முன்னர் பல நிகழ்வுகளை நடாத்தவுள்ளோம். விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதாயின் வாகன வசதி இன்னொருவரை அழைத்துச் செல்வது தற்காலிக அடையாள அட்டை தொடர்பிலான அதனை கிராம சேவகரிடம் பெறுவது தொடர்பிலும் தெளிவூட்டல்களை மேற்கொண்டு வருகிறோம் தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடான வழிகாட்டலின் கீழ் இது வரைக்கும் குறித்த பகுதியில் ஐந்து விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தியுள்ளோம்.

கடந்த காலங்களில் அச்ச சூழ் நிலையில் பல அசௌகரியங்களுடன் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு முதற் தடவையாக வாக்களிக்க செல்பவர்கள் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான நிலமைகளை கருத்திற் கொண்டு வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும் போது கொண்டு செல்லக் கூடிய ஆவணங்கள் தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகிறது. இம் முறை தேர்தலில் ஒருவர் 50 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெறாத பட்சத்தில் இரண்டாம் ,மூன்றாம் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் முறைகள் தொடர்பாகவும் பல விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

# தமிழ் மக்களின் தெரிவு ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என்பது நம்பிக்கை

( வாஸ் கூஞ்ஞ)

ஈழத்தமிழ் மக்களுடைய கூட்டு அரசியல் வேணாவாவையும் தமிழின அழிப்பையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அரசியல் கோட்பாட்டுச் சூழலில் தெற்கில் இருக்கும் சனாதிபதி வேட்பாளர்கள் ஒன்றுபட்டிருக்கின்றார்கள். ஆகவே தமிழ் மக்களின் தெரிவு ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என்பது ஆழமான நம்பிக்கை என வடக்கு கிழக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள்துறவியர் ஒன்றியம் ஊடகச் செய்தியில் இவ்வாறு தெரிவித்தள்ளது.

நடைபெற இருக்கும் சனாதிபதி தேர்தல் தொடர்பாக வடக்கு கிழக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள் துறவியர் ஒன்றியம் தமிழ் மக்களுக்கு விடுத்திருக்கும் தனது ஊடகச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மீண்டும் ஒரு சனாதிபதி தேர்தலுக்கு நாடு தயாராகிக்கொண்டு இருக்கின்றது. இச் சனாதிபதி தேர்தல் பற்றிய அல்லது சனாதிபதி தேர்தல் வேட்பாளர் பற்றிய அரசியல் அறிவு அவர்களது தனி கூட்டு அரசியல் இறந்தகால வரலாற்றுடன்தான் எமக்கு முன்னுள்ள தெரிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவு நம்பிக்கை தருவதாக இருக்கிறது என்பதை அடிக்கோடிட்டு காட்ட வேண்டிய தேவையில்லை. இந்த சனாதிபதி தேர்தலும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் உள்ள சட்டகத்திற்குள் இருந்தே நடாத்தப்படுகின்றது என்ற உண்மையை கூறாமல் இருக்க முடியாது.

தற்போதுள்ள சனநாயக முறைமை எண்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது என்ற உண்மை பொது அறிவுக்குட்பட்டது. வாக்குகளின் எண்ணிக்கையை மையப்படுத்திய சனாதிபதி சனநாயக தெரிவில் ஈழத் தமிழ் மக்களுடையதும் ஏனைய சிறுபான்மை இனக் குழுக்களினதும் வாக்குகள் செல்வாக்கு செலுத்துவது வரையறுக்கப்பட்டுள்ளது.

தெற்கிலிருந்து சனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிங்கள பௌத்த தேசியத்தின் மேலாண்மையை வலியுறுத்தியே பிரச்சாரமேடைகளை அலங்கரிக்கின்றார்கள்.

ஈழத்தமிழ் மக்களுடைய கூட்டு அரசியல் வேணாவாவையும் தமிழின அழிப்பையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அரசியல் கோட்பாட்டுச் சூழலில் தெற்கில் இருக்கும் சனாதிபதி வேட்பாளர்கள் ஒன்றுபட்டிருக்கின்றார்கள். அதே நேரத்தில் தமிழின அழிப்பில் நீதி கோருவதை மறுப்பததோடல்லமால் ஸ்ரீலங்காவின் படைக் கட்டுமானம் சிங்கள தேச விடுதலைசக் கட்டுமானத்தில் ஆற்றிய பங்களிப்பை கதாநாயக சொல்லாடலுக் கூட்டாகவே கட்டமைக்கின்றார்கள்.

தமிழர்தாயகம் தொடர்ந்து ஈழ தமிழ் தேசிய நீக்கத்துக்குள் வலிந்து தள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இது வெள;வேறு வடிவங்கள் பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

உதாரணமாக ஈழத்தமிழர் ஒருங்கிணைந்த தாயகத்தை துண்டாடல் தமிழர்தாயகத்தில் இராணுவ மயமாக்கச் செறிவை அதிகரித்தல் , ஈழத்தமிழர் தாயகம் தொடர்ந்தும் அடக்கு முறைக்கு உட்பட்ட தேசமாகவே உள்ளது. ஈழத்தமிழர் நிலங்கள் வலிந்து பறிக்கப்படுகின்றன. சிங்கள பௌத்தமயமாக்ல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் ஈழத்தமிழர் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான அரசியல் சூழமைவில் அரசியல் அறத் தெரிவாக தமிழ்ப் பொது வேட்பாளர் ஈழத்தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளமாக நமக்குமுன் நிறுத்தப்பட்டுள்ளார்.

இம் முக்கியமான காலக்கட்டத்தில் தமிழ் மக்களின் தெரிவு ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என்பது ஆழமான நம்பிக்கை என வடக்கு கிழக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள்துறவியர் ஒன்றியம் ஊடகச் செய்தியில் இவ்வாறு தெரிவித்தள்ளது.

# மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தியாக தீபன் திலீபனின் முதல் நாள் நினைவேந்தல் ஆரம்பித்துவைப்பு




(மாமாங்கம் நிருபர்)

தியாகதீபம் திலீபனின் 37 வது வருட நினைவேந்தலையிட்டு மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) நா.உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் அன்னராது திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தி; முதல் நாள் திலீபன் வாரத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த 1987 ம் ஆண்டு இந்திய இராணுவத்துக்கு எதிராக பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ் நல்லூர் பகுதியில் தியாக தீபம் திலீபன் உண்ணா விரத போராட்டத்தை ஆரம்பித்து உயிர்நீத்தார்.

திலீபனின் 37 வது நினைவேந்தலையிட்டு அவர் உண்ணாவிரம் இன்று 15ம் திகதி ஆரம்பித்த நாளை தீலீபன் வாரமாக அறித்து நினைவேந்தல்கள் இடம்பெற்றுவந்தன இதனடிப்படையில் தீலுணீபன் வாரத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் தலைமையில் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது இதில் நா.உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டு அன்னராது திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர்தூவி மௌன அஞ்சலி செலுத்தினர்.

## மட்டக்களப்பில் புதிய செயலி அறிமுகம்!!






எஸ்.எஸ்.அமிர்தகழியான்

மட்டக்களப்பில் பொது மக்கள் எதிர்நோக்கு பிரச்சினைகளை வெளிக்காட்டுவதற்கான விஸ் அக்ட் (VisAct) செயலியானது டிரிம் ஸ்பேஸ் அக்கடமியின் பணிப்பாளர் என். கிசோத் தலைமையில் கல்லடி கிறின்காடன் விடுதியில் (13) திகதி இடம் பெற்றது.

மக்கள் மத்தியில் சமூக பொறுப்பு மற்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இச் செயலி யூஸ்எயிட் (USAID) மற்றும் குளோபல் கொமியுனிட்டி (Global communities) நிறுவனங்களுடன் இணைத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

முதற்கட்டமாக இச்செயலி மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், மக்கள் அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாக எதிர் நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அவற்றுக்கான தீர்வுகளை வழங்கக்கூடிய உரிய அதிகாரி அல்லது பொறுப்பான நபர்களுக்கு துரித கதியில் தெரிவிப்பதற்கான ஊடகமாகவே இச் செயலி செயற்படவுள்ளது.

அரச உயர் அதிகாரிகள் மற்றும் திணைக்கள தலைவர்களுடன் இணைந்து இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், வைத்திய அதிகாரிகள், வலய கல்வி அதிகாரிகள், மட்டக்களப்பு மாநகரசபை உயர் அதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலத்தில் சிறுவர் தினத்தை முன்னிட்டு விவாத போட்டிகளுக்காக பயிற்சிகள்





எஸ்.எஸ்.அமிர்தகழியான்

மட்டக்களப்பில் சிறவர் தினத்தை முன்னிட்டு விவாத போட்டிகளுக்கான பயிற்சியானது மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவன் தலைமையில் மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மதிராஜ் எற்பாட்டில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (14) திகதி இடம் பெற்றது.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் 2024 ஆம் ஆண்டு சர்வதேச சிறுவர் தின கருப்பொருளாக 'பிள்ளைகளை பாதுகாப்போம் சமமாக நடத்துவோம்' எனும் கருப்பொருளை வலுப்படுத்தும் முகமாக இப் பயிற்சி பாசறை நடைபெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளில் காணப்படும் சிறுவர் கழகங்களை வலுப்படுத்துவதற்கும் சிறார்களை ஆளுமையுடன் கூடிய பேச்சாற்றல் மிக்கவர்களாக மாற்றுவதற்கு மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி பாசறைக்கான அனுசரனை சேரி நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் போது விவாத நுட்பங்கள் மற்றும் விவாதத் திறன்களை மேம்படுத்துவதற்கு இத் துறையில் நிபுனத்துவம் பெற்றவர்கள் மூலம் ஆலோசனை மற்றும் நுணுக்கங்கள் சிறார்களுக்கு வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின் வளவாளராக சிவ வரதகரன், அன்பழகன் குறூஸ் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சிறுவர்களுக்கான உரிமை, சிறுவர் பாதுகாப்பு, சமகால சவால்கள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் சேரி நிறுவன தேசிய திட்ட முகாமையாளர் வி.இ தர்ஷன், பதவி நிலை உதவியாளர் எம். ரிழா, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## ஆர்வத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பங்கேற்பு




(பாறுக் ஷிஹான்)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நாடு பூராகவும் நடைபெற்றது.

இதற்கமைய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அம்பாறை மாவட்டத்தில் கடும் வெயிலுக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்றது.பரீட்சை காலை 09.30 மணிக்கு ஆரம்பமானதுடன் பரீட்சார்த்திகள் அனைவரும் உரிய ஒழுங்கமைப்புடன் பரீட்சை மண்டபத்திற்கு சென்றதை காண முடிந்தது.

நேற்று காலை ஆரம்பமான குறித்த பரீட்சைக்கு கல்முனை கல்வி வலயம் சம்மாந்துறை கல்வி வலயத்தை சேர்ந்த மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பரீட்சைக்கு சமூகமளித்திருந்தனர்.

மேலும் பரீட்சை இடம்பெற்ற நிலையங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது பரீட்சையை எவ்வித பிரச்சினைகளும் இன்றி நடைபெறுவதற்கு பெற்றோர்கள் உள்ளிட்ட தரப்பினர்கள் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாக எமது பிராந்திய செய்தியாளர் பாறுக் ஷிஹான் தெரிவித்தார்.

முதலில் மு. ப. 9.30 மணி முதல் பிற்பகல் 10.45 வரை பகுதி டிடி வினாத்தாள் இடம்பெறவுள்ளது.மு. ப. 10.45 மணி முதல் பிற்பகல் 12.15 வரை பகுதி டி வினாத்தாள் இடம்பெறும்.மு.ப. 10.45 - மு.ப. 11.15 வரை இடைவேளை வழங்கப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த இடைவேளையின் போது மாணவர்கள் வெளியில் செல்லவோ, பெற்றோர் பாடசாலைக்குள் செல்லவோ அனுமதி வழங்கப்படாது என அவர் தெரிவித்தார்.

பரீட்சைக்கு நேர காலத்துடன் மாணவர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோருக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான பரீட்சை நாடளாவிய ரீதியில் 2849 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதுடன் 323879 பரீட்சார்த்திகள் இதற்குத் தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வட கிழக்கு மக்களுக்காக சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கூட்டுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



வடகிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, அபிவிருத்தியை கொண்டு வருவதற்கு வேறெந்த தலைவரும் செய்யாத விடயத்தை நாம் செய்வோம். தாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு வடகிழக்கு மக்களை மையப்படுத்தியதாக சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கூட்டுவோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு பிரதேசத்தை பாரிய அபிவிருத்தியின் பால் இட்டு செல்வோம். இதன் ஊடாக ஒன்பது மாகாணங்களையும் அபிவிருத்தியடையச் செய்ய நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐந்து தடவைகள் பிரதமராக இருந்த தற்போதைய பதில் ஜனாதிபதி வடகிழக்கு மக்களை சந்திக்க சென்றார். அவரினால் வடகிழக்கு மக்களுக்காக நன்கொடையாளர்கள் மாநாட்டைக் கூட்ட முடியுமாக இருந்தாலும், அதற்கான இயலுமை அவரிடம் இல்லாத காரணத்தினால் அந்த மாநாட்டை கூட்டவில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கு அந்த இயலுமை இருக்கின்றது.

எனவே அதிகாரத்திற்கு வந்த உடனே சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கூட்டுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 57 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 15 ஆம் திகதி கிளிநொச்சியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக அனைத்து பாடசாலைகளையும் மாற்றி தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், நவீன தொழில்நுட்பம், மற்றும் ஆங்கில மொழிக் கல்வி என்பனவற்றை பயில்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி, புதிய கல்வி முறை ஒன்றின் ஊடாக சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம். சகல வசதிகளையும் கொண்ட வைத்திய சாலைகளாக அனைத்து வைத்தியசாலைகளையும் மாற்றி உயர்தரத்திலான அனைத்து வசதிகளையும் கொண்ட வைத்தியசாலை கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# நுவரெலியா பிரதான நகரில் ஜனாதிபதியின் தேர்தல் பிரச்சார கூட்டம்









(திவாகர் நானுஓயா நிருபர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில், 2024 ஜனாதிபதி சுயேட்சை வேட்பாளர் கௌரவ ரணில் விக்ரமசிங்ஹ அவர்களை ஆதரித்து நுவரெலியா பிரதான நகரில் மணிக்கூட்டு கோபுரம் அமைந்துள்ள கவிதாஸ் வாகன தரிப்பிடத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) 'இயலும் ஸ்ரீலங்கா' வேண்டும் ரணில், மீண்டும் ரணில் ஜனாதிபதி தேர்தல் பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

இப்பிரச்சார கூட்டம் நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானின் தலைமையில் நடைபெற்றது இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். மேலும் கிழக்கு மாகாண ஆளுனரும்,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் , இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் , முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சப்ரகமுவ மாகாண ஆளுனர் நவீன் திசாநாயக்க உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள்,

இலங்கை தொழிலாளர் காங்ரஸின் முக்கியஸ்தர்கள் முன்னாள் நுவரெலியா மாநகரசபையின் நகர முதல்வர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்கள், மாவட்டத் தலைவிமார்கள், தோட்டத் தலைவர், தலைவிமார்கள் உட்பட பலரும் கலந்துக் கொண்டிருந்தனர். இப் பிரச்சார கூட்டமானது நுவரெலியா மாவட்டத்தினை மையமாக கொண்டு நடைபெற்றமையால் நகர்ப்புற மற்றும் தோட்டங்களை உள்ளடக்கிய வகையிலான பெருந்திரலான பொது மக்கள் கலந்துக் கொண்டிருந்தனர்.

# மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் வாழ்வும் பணியும் ஒரு கண்ணோட்டம்

(யூ.கே. காலித்தீன்)

அன்று ஒருநாள் 16 ஆம் திகதி சனிக்கிழமை (16.09.2000) அன்று மிகப் பெரும் துயரத்தைக் கொண்ட நாளாக விடியும் என்று எவருமே நினைத்திருக்கவில்லை. அன்று காலை 9.05 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்திலிருந்து இலங்கை விமானப் படைக்குச்சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று கிழக்கு நோக்கிப் பறந்து சென்றது.


ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் அன்று காலை இறக்காமத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக மேலும் 14 பேருடன் அந்த ஹெலிகொப்டரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.


கொழும்பிலிருந்து 110 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அரநாயக்கப் பகுதியில் இருக்கும் பைபில் றொக் (B-i-b-il Ro-c-k) மலைப்பகுதியின் மேலாக அந்த ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்த போது திடீர் விபத்துக்குள்ளானது. பலத்த வெடியோசையுடன் தீப்பிழம்பாக வானத்தில் வெடித்துச் சிதறியது. அமைச்சரும் அவருடன் பயணம் செய்த மேலும் 14 பேரும் அந்த விபத்தின் போது அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

ஹெலிகொப்டர் சிதைவுகளுக்கு மத்தியிலிருந்து கருகிய நிலையிலான சடலங்கள் மீட்கப்பட்டன. அமைச்சர் அஷ்ரபின் ஜனாஸாவை சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க அடையாளம் காட்டினார். அமைச்சர் அஷ்ரப் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி மரணமானார் என்ற செய்தி கிழக்கு மாகாணத்தை காட்டு தீ போல் பரவிய போது மக்கள் வாய்விட்டுக் கதறினார்கள். சோகம் தாழாமல் தலையில் அடித்துப் புலம்பினார்கள்.

அமைச்சரை வரவேற்பதற்காக மாபெரும் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண வீதியெங்கும் துயரவெள்ளம் கரைபுரண்டது. வரலாறு காணாத சோகத்தில் கிழக்கு மாகாணம் மூழ்கிப் போனது. தனது சொந்த சகோதரனை இழந்த துயரத்தில் கிழக்கு மாகாண மக்கள் செயலிழந்து நின்றார்கள்.

மர்ஹூம் எம்,எச்.எம். அஷ்ரப் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி சம்மாந்துறையில் முஹம்மது மீராலெப்பை ஹுஸைன் மற்றும் மதீனா உம்மா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வராக கல்முனையில் பிரபலமான காரியப்பர் குடும்பத்தில் பிறந்தார். 1977 ஆம் ஆண்டு எம்.எச். எம். அஷ்ரப், பேரியல் இஸ்மாயிலுடன் தனது இல்லற வாழ்வில்





நுழைந்தார். சட்டக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலேயே அஷ்ரப் இலங்கை அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டார். அஷ்ரப் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். தந்தை செல்வநாயகத்தை தனது அரசியல் குருவாக அஷ்ரப் வகுத்துக் கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொண்ட எம்.எச்.எம். அஷ்ரப் முஸ்லிம் சமூகத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்.

சிறுபான்மைச் சமூகம் தனித்துவங்களை அடையாளப்படுத்தி தனது உரிமைகளுக்காக போராடாதவரை அந்த சமூகங்கள் கையேந்தி நிற்க வேண்டிய அவல நிலையை அவர் அறிந்தார். இந்த நிலையில் தான் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உதயமானது.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களை ஓரணியில் இணைப்பதற்கு பெரு முயற்சிகளை மேற்கொண்டார்.

முஸ்லிம்களின் தனித்துவமான குரலாக அது ஒலிக்கத் தொடங்கியது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முறையாக அரசியல் பிரவேசம் செய்தது. எதிர்பார்த்ததற்கு மேலாக வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முதலாக போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் நான்கு இடங்களைக் கைப்பற்றியது. எம்.எச்.எம். அஷ்ரப், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, ஏ. அபூபக்கர், என்.எம். புகார்தீன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களானார்கள்.

1994 ஆம் ஆண்டில் மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற்றது. அது மட்டுமன்றி அஷ்ரப் சந்திரிக்கா ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. வடக்கு கிழக்கில் மட்டும் தம் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி வைத்திருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ரீதியாக சிந்திக்கவும், செயற்படவும் தொடங்கியது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்தத் தேர்தலில் ஒன்பது இடங்களைக் கைப்பற்றியது. இந்தத் தேர்தலில் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களை தேசியத் தலைவராகவும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை தேசியக் கட்சியாகவும் பரிணமிக்கச் செய்தது. 1994 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் காலத்தில் திட்டமிடப்பட்ட பணிகளில் ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம், காலித் துறைமுக அபிவிருத்தி, எலிசபத் இறங்குதுறை அபிவிருத்தி போன்றவை இன்றும் எம்மத்தியில் நிலைத்து நிற்க வல்லன. புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை வரைவதில் அஷ்ரப் மிகத் தீவிரமாக உழைத்திருந்தார். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். அதன் பெறுபேறாகத்தான் ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும் பெரும் பொறுப்பு அவருக்குக் கிட்டியது. சுமார் 3 மணித்தியாலங்களாக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் உரையாற்றிய உரை இலங்கை அரசியல் வரலாற்றில் நினைவு கூரப்படும் சிறப்புக்குரியதாகும்.

அரசியல் என்பது அஷ்ரப் அவர்களின் வாழ்வில் ஒரு சிறு பகுதி மட்டுமே. அதற்கு அப்பால் அஷ்ரப் பல்துறை சார்ந்த ஆளுமையே அவரை ஒரு மகா புருஷராக எம்முடன் நடமாட வைத்துள்ளது. அஷ்ரப் அவர்களின் பேச்சுத் திறனும் தர்க்கிக்கும் ஆற்றலும், விவாதத் திறனும் மெய்மறக்கச் செய்யும் வல்லமை கொண்டவை. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் வாழ்க்கை ஓட்டத்தை அணுகி ஆராய்வோர் அவரிடம் அமானுஷ்யமான ஒரு ஆற்றல் பரிணமிப்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

அந்த வகையில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஒரு வாழ்க்கைத் தத்துவமாக நிற்கின்றார். அதனால் தான் அவரால் மரணத்தை நோக்கி சிந்திக்க முடிந்தது. மரணத்தோடும் அவரால் போராட முடிந்தது, அவரால் மரணத்தை நோக்கி அறைகூவல் விடுக்கவும், மானுடத்தை நோக்கி நேசக்கரம் நீட்டவும் முடிந்தது.

அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதி கிடைக்கவும், அவருடைய கப்று சுவனபதியால் விசாலமாக்கப்படவும் வல்ல அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திப்போம்.



























சுவிட்ஸர்லாந்து சூரிச் மாநிலத்தில் சனிக்கிழமை நடைபெற்ற சூரிச் அடிஸ்வில் சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான முத்துவிழாவின் படத்தொகுப்பு

# போதும்- சிறுவர்களின் பசியை இப்போதே முடிவுக்கு கொண்டு வருவோம் எனும் தொனிப் பொருளில்

# கொட்டகலையில் பிரச்சார நடவடிக்கை நிகழ்வு

































வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினையை வெற்றிக்கொள்ளும் வகையிலான பிரசார நடவடிக்கையொன்று போதும்- சிறுவர்களின் பசியை இப்போதே முடிவுக்கு கொண்டு வருவோம் எனும் தொனிப் பொருளில் கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், வேர்ல்ட் விஷன் மற்றும் கொட்டகலை பெருந்தோட்ட நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தி பிரச்சார நடவடிக்கை நிகழ்வு வெள்ளிக்கிழமை கொட்டகலை கொமர்சியல் லேக் மைதானத்தில் பல நிகழ்வுகளுடன் நடைபெற்றததைக் காணலாம்.

படம்:எஸ்.பி.ரஜினிகாந்த் அட்டன்

# இந்தியாவில் காந்தி பெற்றுத் தந்த சுதந்திரமும் ஈழத்தில் அகிம்சையின் உச்சமான திலீபனும்

நவீனன்

**( 15/9/1987இல் தமிழரின் உரிமைக்காக தன்னை மெழுகாய் உருகத் தொடங்கிய திலீபனின் உண்ணா விரதம் ஆரம்பமாகிய நாள். மகாத்மா காந்தி உருவாக்கிய அகிம்சை வழி போராட்டம், திலீபனின் தியாகத்தால் உச்சம் தொட்டதை உலகம் உணர முடிந்தது)**



அகிம்சை ஒரு நெடிய போராட்டம். போராடிக் கொண்டே இருக்கலாம். முடிவு போராட்டத்தின் கையில் இல்லை. எதிராளியின் வலிமையை பொறுத்தே உள்ளது.

காந்தியால் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்று கடந்த வருடம் தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் ரவி சொல்லி இருப்பதை பலரும் விமர்சித்து உள்ளனர்.

இவ்வேளையில் அகிம்சையின் உச்சம் தொட்ட திலீபனின் தியாகத்தையும் உணர வேண்டும். மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் சொல்லியிருப்பது வன்மம் கலந்த நோக்கமே என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், முதல்வர் இதனை கடுமையாக சாடியுள்ளார்.

கடந்த வருடம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ரவி பங்கேற்று பேசினார். அப்போது, மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசிய கருத்துக்கள் விமர்சனத்திற்குள்ளானது.

எனினும் காந்தியின் அகிம்சை அவர் பற்றியும், காந்தி பெற்றுத் தந்த இந்திய சுதந்திரம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஏன், மகாத்மா காந்தியை விட திலீபனின் தியாகத்தால் சிறந்தவன் என இந்திய அரசியல் தலைவர்களே கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் காந்தி தேசத்தின் தமிழின விரோத நிலைப்பாட்டின் அழியா சாட்சியாக விளங்குவதே தியாக தீபம் திலீபனின் உயிர்க் கொடையாகும். திலீபனின் போராட்டம் மற்றொரு முறை அகிம்சை என்ற தத்துவத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.



**காந்தியை விட திலீபன் மேலானவன் - வை.கோ:**

திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, அன்றைய இந்தியத் தூதுவர் தீக்சித் இடம் திலிபனின் உண்ணாவிரதம் பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த தீக்சித், திலீபன் என்ன மகாத்மா காந்தியா? என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

இந்தியத் தூதுவர் தீக்சித்தின் இந்தக் கூற்று பற்றி பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த வை.கோபால்சாமி அவர்கள், திலீபன் மகாத்மா காந்தியைவிட சிறந்தவன் என்று அடித்துக் கூறியிருந்தார்.

திரு வைக்கோ, தனது இந்த வாதத்திற்காக மகாத்மா காந்தியின் சுயசரிதையான சத்திய சோதனையில் இருந்து ஒரு சம்பவத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார். மகாத்மா காந்தியின் இளமைப் பருவத்தின் போது அவரது தந்தை காலமாகிவிட்டார்.

தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமையின் பாலியல் உணர்ச்சிகளை காந்தியால் கட்டுப்படுத்தமுடியாமல் மறைவில் சென்று அதனை தீர்த்துக்கொண்டதாக சத்திய சோதனையில் காந்தி தெரிவித்திருந்தார்.

இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவினாலேயே அடக்கமுடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத்தில்கூட மகாத்மாவினால் தனது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்தமுடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.

ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதிற்கான அனைத்து உணர்ச்சிகளையும் உதறித் தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரை தியாகம் செய்ய முன்வந்திருந்தான். இதனாலேயே மகாத்மா காந்தியை விட திலீபன் மேலானவன் என வை.கோபால்சாமி தெரிவித்திருந்தார்.

**ஒப்பிலா அறவழிப் போராளி திலீபன்:**



நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன் என தன்னுடலுக்கு துரோகமும் தன்னினத்திற்கு தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த்தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியிலேந்திய பார்த்திபன் இராசையா என்னும் இயற்பெயர்கொண்ட திலீபன், நவம்பர் 29, 1963-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் பிரதேசத்தின் ஊரெழு கிராமத்தில் ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தவர். சிறு வயதிலேயே தாயினை இழந்தார். தந்தையின் பாசம், இரு அண்ணன்களின் அரவணைப்பு என மிகவும் செல்லமாக வளர்ந்த திலீபன் படிப்பிலும், அறிவுக் கூர்மையிலும் மிகுந்த திறனுடையவராக இருந்தார்.

இலங்கை அரசு தமிழ் மாணவர்களின் கல்வியை நாசப்படுத்த கொண்டு வந்த தரப்படுத்துதல் அளவையும் தாண்டி அதிக மதிப்பெண் எடுத்து யாழ் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தேர்வாகி படிக்கச் சென்றார். மருத்துவம் படித்து மக்களுக்கு சேவை செய்ய நினைத்த மகத்தான மனிதன் தன்னின மக்கள் சிலரிடம் நோயாக மாறியிருந்த இனவுணர்வுக் குறைபாட்டை போக்க தனது உயிரையே மருந்தாக அளித்த துயரமும் நடந்தேறியது.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத்ததாக கூறும் இந்தியா, உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறிவுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட்டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இது தான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலைப் பெற்றது என்பதே இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பபட்ட மிகைப்படுத்தப்பட்ட பிம்பம் தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியாவின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விட வில்லை. இந்திய விடுதலை அகிம்சையினால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

தமிழ் நாடு ஆளுநரின் கருத்துக்கு கண்டனங்கள் எழுந்தாலும், காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க்கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. திலீபன் காந்தீய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாக கருதவில்லை. தியாகத்தின் உச்சத்திற்கே திலீபன் சென்றார்.

